**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**

**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 ஆம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீவிசுவாவசு வருடம், மாசித்திங்கள் 21 ம் நாள்

**<u>அசல் வழக்கு எண். 61/2020</u>**

**<u>CNR No.TNTI14-000079-2020</u>**

1. S.காசிநாதன்
2. S.செந்தில்குமார் ... வாதிகள்

/எதிர்/

1. தனலட்சுமி
2. சீதாலட்சுமி
3. பரமேஸ்வரன்
4. அமுதா

(Amended as per order in I.A.No.440/2022 Dated : 03.08.2022)

... பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக 27.02.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.ஈஸ்வரமூர்த்தி, B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.மோகன், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

**<u>தீர்ப்புரை</u>**

தாவா சொத்தில் வாதிகளின் அமைதியான அனுபவம் மற்றும் சுவாதீனத்தை பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ அல்லது வேறு யாரும் எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கும்படிக்கும், தாவா செலவுத்தொகை வாதிகளுக்கு பிரதிவாதிகளால் கிடைக்கும்படிக்கும், வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:-</u>**

i) தாவா சொத்தான பழைய க.ச.எண். 1204 இதன் புதிய ரீ.ச.எண்.476/26 பு.ஹெக்.0.07.5 விஸ்தீர்ண பூமியானது ஆதியில் ஒரு கிருஷ்ணசாமி முதலியாருக்கு பாத்தியப்பட்டது. பின்னிட்டு கிருஷ்ணசாமி முதலியார் தனக்கு பாத்தியப்பட்ட சொத்தினை கடந்த 01.02.1934 தேதியிட்ட கிரைய ஆவண எண்.140/1934 ன் படி வாதிகளின் தகப்பனாரின் தாத்தாவான அண்ணாமலை செட்டியாருக்கு கிரையம் செய்து கொடுத்து விட்டார். மேற்படி கிரையம் மூலம் உரிமை அடைந்த அண்ணாமலை செட்டியார் வழக்கு சொத்தில் கட்டிடங்கள் கட்டியும் அதனை சுற்றி மதில் சுவர் கட்டியும் தனது காலம் வரை அனுபவித்து வந்து, தனது மகனான காசிநாதன் செட்டியார் வாரிசாக விட்டுவிட்டு காலமாகி விட்டார்.

ii) மேற்படி காசிநாத செட்டியாரும் வாரிசு உரிமைப்படி தாவா சொத்துக்களில் உரிமையடைந்து அவரது தகப்பனாரை தொடர்ந்து அனுபவித்து வந்து அவரது ஒரே மகனான சிவாச்சலம் செட்டியாரை வாரிசாக விட்டு விட்டு காலமாகி விட்டார். தாவா சொத்துக்களைப் பொறுத்து வாதிகளின் மூதாதையர்களின் தொடர்ச்சியான 80 ஆண்டு கால அனுபவத்தின்

அடிப்படையில் தாவா சொத்துக்களைப் பொறுத்து புதிய நத்தம் எண்.476/26ல் பு.ஹெக்.0.07.50 பூமிகளைப் பொறுத்து வாதிகளின் தகப்பனார் சிவாச்சலம் செட்டியார் பெயரில் பட்டா வழங்கப்பட்டு வாதிகளின் தகப்பனார் சிவாச்சலம் செட்டியார் மற்றும் வாதிகள் தாவா சொத்துக்களை பொறுத்து கடந்த 16.06.2014 தேதியன்று பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் மூலம் பாகப்பிரிவினை செய்து கொண்டதில் தாவா அயிட்டம் 1 சொத்தான 4050 சதுரடி பூமி 1ம் வாதிக்கும் மற்றும் தாவா அயிட்டம் 2 சொத்தான 4026 சதுரடி பூமி 2ம் வாதிக்கும் பாகம் பிரித்து ஒதுக்கப்பட்டது.

iii) மேற்படி பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு தாவா அயிட்டம் 1 சொத்தினையும் அதில் உள்ள கட்டிடங்களையும் 1ம் வாதியும், தாவா அயிட்டம் 2 சொத்தினையும் அதில் உள்ள கட்டிடங்களையும் 2ம் வாதியும் அடைந்து முழுமையான உரிமையாளர்களாக எவ்வித இடைஞ்சல் இன்றி அவரவர்கள் சொத்துக்களை அவரவர்கள் அனுபவித்து வருகிறார்கள். தாவா சொத்திற்கான வருவாய்த்துறை ஆவணங்கள் மற்றும் நகராட்சி சொத்து வரி முதலியவை வாதிகள் பெயருக்கு மாற்றப்பட்டு வாதிகளால் தொடர்ந்து செலுத்தப்பட்டு அனுபவித்து வருகிறார்கள். தாவா சொத்தில் வாதிகளை தவிர வேறு யாருக்கும் எவ்வித உரிமையும், அனுபவமும் கிடையாது.

iv) பிரதிவாதிகள் அனைவரும் வழக்கு சொத்தை பொறுத்தவரை அந்நியர்கள் ஆவார்கள். பிரதிவாதிகள் தாவா சொத்தின் வடபுறத்து சொத்தின் உரிமையாளர்கள் என்று பொய்யாக கூறி கொண்டு கடந்த 10.01.2019 தேதியன்று பிரதிவாதிகள் தாவா சொத்தை குறைந்த விலைக்கு கிரையத்திற்கு கேட்டு வாதிகள் அதற்கு மறுத்து விட்டதால் பிரதிவாதிகள் வாதிகளிடம் மன

விரோதத்தை வளர்த்து கொண்டார்கள். இந்நிலையில் கடந்த 06.04.2019 தேதியன்று தாவா சொத்தின் முன் பக்கத்தில் பிரதிவாதிகள் வேண்டுமென்றே கூடுதலாக பூட்டினை போட்டு பூட்டி வாதிகளின் அனுபவத்தை இடைஞ்சல் செய்தார்கள். வாதிகள் கடந்த 09.04.2019 தேதியன்று பிரதிவாதிகளிடம் கேட்டதற்கு அவர்கள் மறுத்து இடைஞ்சல் ஏற்படுத்தியதால் வாதிகள் கடந்த 12.04.2019 தேதியன்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள்.

v) பிரதிவாதிகள் கடந்த 20.01.2020ம் தேதியன்று மீண்டும் வாதியின் முன்புற கதவை பூட்டி வாதியின் அனுபவத்தை இடைஞ்சல் ஏற்படுத்தி வந்தார்கள். பிரதிவாதிகள் தாவா சொத்தில் வாதியின் அனுபவத்தை வேண்டுமென்றே இடைஞ்சல் செய்து வருகிறார்கள். பிரதிவாதிகள் தாவா சொத்தில் வாதியின் அனுபவத்தை எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்ய உரிமையற்றவர்கள் ஆவார்கள். எனவே தாவா சொத்தில் வாதிகளின் அமைதியான அனுபவம் மற்றும் சுவாதீனத்தை பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ அல்லது வேறு யாரும் எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்து உத்தரவிட வேண்டும் என்பதே வாதிகள் தரப்பு வழக்குரை சுருக்கமாகும்.

## 2) 1, 3 மற்றும் 4 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரைச் சுருக்கம்:—

i) வாதிகளின் தாவா பொய், மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும், ஆவணங்கள் படியும் செல்லத்தக்கதல்ல. இப்பிரதிவாதிகள் இந்த எதிர் வழக்குரையில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகள் தவிர மற்றவைகளை வாதிகளே கண்டிப்பாக ஆவணப்பூர்வமாக நிரூபிக்க வேண்டியது.

ii) பிரதிவாதிகளின் முன்னோரான ஒரு கணபதி பண்டாரம் கடந்த 1927ம் வருடம் திருப்பூர் ரோட்டில் மேற்படி வாதிகளின் முன்னோர்கள் பெற்ற அதே காலையில் 1204ல் குறிப்பிட்ட செக்குப்பந்திகள் கண்டு தற்போது பிரதிவாதிகள் உபயோகித்து வரும் பூமி மற்றும் கட்டிடங்களை ஒரு வெங்கட்ரமண செட்டியார் என்பவரிடம் கிரையம் பெற்றுள்ளார். கணபதி பண்டாரத்திற்குப் பின்னிட்டு அவரது வாரிசுகள் அனுபவித்து வந்து தற்போது வரை மேற்படி கணபதி பண்டாரம் கிரையம் பெற்ற சொத்துக்களை எவ்வித பாகப்பிரிவினைகளும் செய்யாமல் பிரதிவாதிகள் தங்களது அனுபவ சுவாதீனத்தில் வைத்து வாழ்ந்து வருகிறார்கள். பிரதிவாதிகளின் தகப்பனார் சச்சிதானந்தம் ஆவார்.

iii) மேற்படி வழக்கில் அயிட்டம் 2 சொத்தில் செக்குப்பந்தியில் சச்சிதானந்தம் இடத்திற்கு தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சச்சிதானந்தம் என்பது பிரதிவாதிகளின் தகப்பனாரைக் குறிக்கும். பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு தென்புறத்தில் பாத்தியம் உள்ளதாக கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ள வாதிகள் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் தென்புறத்தில் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்ய வேண்டி உண்மைக்கு புறம்பான சங்கதிகளை கண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே 1, 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரை சுருக்கமாகும்.

<u>3) 2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரைச் சுருக்கம்:–</u>

i) வாதிகளின் தாவா பொய், மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும், ஆவணங்கள் படியும் செல்லத்தக்கதல்ல. 2ம் பிரதிவாதி இந்த எதிர் வழக்குரையில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகள் தவிர மற்றவைகளை வாதிகளே கண்டிப்பாக ஆவணப்பூர்வமாக நிரூபிக்க வேண்டியது.

ii) பிரதிவாதிகளின் தகப்பனார் சச்சிதானந்தம் இறந்துவிட்டார். பிரதிவாதியின் தாயார் விஜயலட்சுமிக்கு தற்போது சுமார் 80 வயதாகிறது. மேற்படி பிரதிவாதிகளின் தாயாருக்கு தாவா சம்பந்தப்பட்ட விபரங்கள் நன்கு தெரியும். எனவே தான் பிரதிவாதிகளின் தாயாரான விஜயலட்சுமியை கட்சி சேர்த்தாமல் வாதிகளால் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. க.ச.1204 ரீ.ச.எண்.476/26 ல் வாதிகளின் முன்னோர் அண்ணாமலை செட்டியார் என்பவர் கடந்த 01.02.1934 ல் பு.ஹெக்.0.07.5 விஸ்தீரண பூமியை கிரயம் பெற்றுள்ளார் என்பது உண்மையல்ல. மேற்படி வீதம் 1934 ல் கிரயம் பெற்ற சொத்தில் மேற்படி கட்டிடங்கள் காம்பவுண்ட் சுவர் அமைந்துள்ளதை நீதிமன்றத்திற்கு வாதிகள் எவ்விதத்திலும் நிரூபணம் செய்யவில்லை.

iii) மேற்படி சொத்தில் உள்ள நிலை அம்சங்களையும், அளவுகளையும் நிரூபிக்க நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமிக்க அனுமதி பெறாத நிலையில் வழக்குரை சங்கதிகளை மட்டுமே வைத்து தாவா சொத்துகளின் நிலை அம்சங்களை வாதிகள் நீதிமன்றத்திற்கு நிரூபிக்க முற்பட்டுள்ளது சட்டத்திற்கு புறம்பானதாகும். கடந்த 16.06.2014 ல் வாதிகளின் தகப்பனார் K.சிவாச்சலம் செட்டியார் மற்றும் 1, 2 வாதிகளும் தாவா சொத்துகளை பொறுத்து பாகம் பிரித்து கொண்டனர் என்றும் 1 ம் வாதிக்கு 4050 சதுரடிகள் கொண்ட இடமும் கட்டிடங்களும், 2 ம் வாதிக்கு 4026 சதுரடிகள் கொண்ட இடமும் கட்டிடங்களும் பாகம் பிரிந்துள்ளதாக கூறியுள்ள நிலையில் எந்த மூல ஆவணத்தை கொண்டு பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்பதை தெளிவுபடக் கூறாத நிலையிலேயே மேற்படி பாகப்பிரிவினை மோசடியான ஒன்று என்பது தெளிவாகும்.

iv) பிரதிவாதிகளின் தகப்பனார் சச்சிதானம் என்பவரின் தகப்பனார் கணபதி பண்டாரம் கடந்த 24.08.1927 ல் காங்கயம் சப்ரி ஆபிஸ் ஆவண எண்.

1773/1927 கிரயப்படி ஒரு வெங்கடரமண செட்டியாரிடம் கிரயம் பெற்றுள்ள இடத்திற்கு செக்குபந்தியாக தென்புறம் கிருஷ்ணசாமி முதலியார் காலிநிவேசனம் என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது. மேற்படி கிருஷ்ணசாமி முதலியார் இடம் எவ்வளவு விஸ்தீரணம் அந்த இடத்தை பொறுத்துதான் வாதிகள் முன்னோர்கள் கிரயம் பெற்றார்களா என்பதை வாதிகளே நிரூபிக்கவேண்டியது. இந்நிலையில் மேற்படி பிரதிவாதிகளின் முன்னோர் கணபதி பண்டாரம் கிரயம் பெற்ற சொத்துகளில் வாரிசுரிமைப்படி பிரதிவாதிகளும் பிரதிவாதிகளின் தாயாரும் சுவாதீனத்தில் வைத்து அமைதியான முறையில் அனுபவித்து வருகின்றனர்.

v) மேலும் வாதிகள் பிரதிவாதிகள் மீது தாவா தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு காங்கயம் காவல் நிலையத்தில் பல பொய் புகார்களை கொடுத்து அந்த புகாரில் வாதிகளுக்கு தேவையான விபரங்களையும் சங்கதிகளையும் பிரதிவாதிகள் செய்ய முற்படுவதுபோல் காட்டி வாதிகளே பிரதிவாதிகளின் சொத்துகளை இடித்து தரைமட்டமாக்கி அராஜக செயல்களை செய்து விட்டார்கள். பிரதிவாதிகளுக்கு அவர்களது முன்னோர்கள் மூலம் பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்கவேண்டி பல பொய் புகார்களை காங்கயம் காவல் நிலையத்தில் கொடுத்து வழக்குக்கு ஆதாரங்களையும் வழக்கு மூலத்தையும் வாதிகள் உற்பத்தி செய்து கொண்டுள்ளார்கள். பிரதிவாதிகளின் தாயாரை கட்சி சேர்த்தால் வாதிகளின் பொய்யான சங்கதிகள் வெளிப்பட்டுவிடும் என்ற காரணத்தினாலேயே மேற்படியாரை கட்சி சேர்த்தாமல் இத்தாவாவை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே 2ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை சுருக்கமாகும்.

**4) எழுவினாக்கள் :–**

மேற்படி இருதரப்பு வாதுரைகளையும், வழக்குரை மற்றும் எதிர் வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து இவ்வழக்கின் தீர்விற்காக கடந்த 06.12.2024 அன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்ட 1 முதல் 4 எழுவினாக்களை வனைந்துள்ளது.

**5. எழுவினாக்கள் 1 முதல் 4 :–**

| | |
|---|---|
| **எழுவினா – 1** | தாவா சொத்துக்கள் வாதிகளின் தனிப்பட்ட சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் உள்ளது என்பது உண்மையா? |
| **எழுவினா – 2** | வாதிகளுக்கு தாவாவில் கோரியுள்ளபடி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |
| **எழுவினா – 3** | அவசிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தால் தாவா பாதிப்படைந்துள்ளது என்பது உண்மையா? |
| **எழுவினா – 4** | வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன? |

6. இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் 1ம் வாதி காசிநாதன் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.20 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பு சாட்சியாக குமாரசாமி என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். நாச்சிமுத்து என்பவர் வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.21 மற்றும் வா.சா.ஆ.22 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி தனலட்சுமி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் தாவா சொத்தான பழைய க.ச.எண். 1204 புதிய ரீ.ச.எண்.476/26 பு.ஹெக்.0.07.5

விஸ்தீர்ண பூமியானது ஆதியில் ஒரு கிருஷ்ணசாமி முதலியாருக்கு பாத்தியப்பட்டு மேற்படியார் கடந்த 01.02.1934 தேதியில் வாதிகளின் மூதாதையர்களான அண்ணாமலை செட்டியாருக்கு கிரையம் கொடுத்து அவர் வழக்கு சொத்தில் கட்டிடங்கள் கட்டியும் அதனை சுற்றி மதில் சுவர் கட்டியும் தனது காலம் வரை அனுபவித்து வந்து இறந்ததற்கு பின்னிட்டு அவரின் ஒரே மகனான காசிநாத செட்டியார் வாரிசு உரிமைப்படி தாவா சொத்துக்களில் உரிமையடைந்து தொடர்ந்து அனுபவித்து வந்து அவரது ஒரே மகனான சிவாச்சலம் செட்டியாரை வாரிசாக விட்டு விட்டு காலமாகி விட்டார் என்றும் தாவா சொத்துக்களைப் பொறுத்து வாதிகளின் மூதாதையர்களின் தொடர்ச்சியான 80 ஆண்டு கால அனுபவத்தின் அடிப்படையில் தாவா சொத்துக்களைப் பொறுத்து புதிய நத்தம் எண்.476/26 ல் பு.ஹெக்.0.07.50 பூமிகளைப் பொறுத்து வாதிகளின் தகப்பனார் சிவாச்சலம் செட்டியார் பெயரில் பட்டா வழங்கப்பட்டு வாதிகளின் தகப்பனார் சிவாச்சலம் செட்டியார் மற்றும் வாதிகள் தாவா சொத்துக்களை பொறுத்து கடந்த 16.06.2014 தேதியன்று பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் மூலம் பாகப்பிரிவினை செய்து கொண்டதில் தாவா அயிட்டம் 1 சொத்தான 4050 சதுரடி பூமி 1ம் வாதிக்கும் மற்றும் தாவா அயிட்டம் 2 சொத்தான 4026 சதுரடி பூமி 2ம் வாதிக்கும் பாகம் பிரித்து ஒதுக்கப்பட்டது என்றும் மேற்படி பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு 1, 2 வாதிகள் முழுமையான உரிமையாளர்களாக அனுபவித்து வருகிறார்கள் என்றும் தாவா சொத்திற்கான வருவாய்த்துறை ஆவணங்கள் வாதிகள் பெயருக்கு மாற்றப்பட்டு அனுபவித்து வருகிறார்கள் என்றும் பிரதிவாதிகள் அனைவரும் வழக்கு சொத்தை பொறுத்தவரை அந்நியர்கள் என்றும் கடந்த 06.04.2019 தேதியன்று தாவா சொத்தின் முன் பக்கத்தில் பிரதிவாதிகள் வேண்டுமென்றே கூடுதலாக பூட்டினை போட்டு பூட்டி வாதிகளின்

அனுபவத்தை இடைஞ்சல் செய்தார்கள் என்றும் எனவே வாதிகள் கடந்த 12.04.2019 தேதியன்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றும் பிரதிவாதிகள் கடந்த 20.01.2020ம் தேதியன்று மீண்டும் வாதியின் முன்புற கதவை பூட்டி வாதியின் அனுபவத்தை இடைஞ்சல் ஏற்படுத்தி வந்தார்கள் என்றும் பிரதிவாதிகள் தாவா சொத்தில் வாதியின் அனுபவத்தை எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்ய உரிமையற்றவர்கள் என்றும் எனவே தாவா சொத்தில் வாதிகளின் அமைதியான அனுபவம் மற்றும் சுவாதீனத்தை பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ அல்லது வேறு யாரும் எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்து உத்தரவிட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

8. 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் பிரதிவாதிகளின் முன்னோரான ஒரு கணபதி பண்டாரம் கடந்த 1927ம் வருடம் திருப்பூர் ரோட்டில் மேற்படி வாதிகளின் முன்னோர்கள் பெற்ற அதே காலையில் 1204ல் குறிப்பிட்ட செக்குப்பந்திகள் கண்டு தற்போது பிரதிவாதிகள் உபயோகித்து வரும் பூமி மற்றும் கட்டிடங்களை ஒரு வெங்கட்ரமன செட்டியார் என்பவரிடம் கிரையம் பெற்றுள்ளார் என்றும் கணபதி பண்டாரத்திற்குப் பின்னிட்டு அவரது வாரிசுகள் அனுபவித்து வந்து தற்போது வரை மேற்படி கணபதி பண்டாரம் கிரையம் பெற்ற சொத்துக்களை எவ்வித பாகப்பிரிவினைகளும் செய்யாமல் பிரதிவாதிகள் தங்களது அனுபவ சுவாதீனத்தில் வைத்து வாழ்ந்து வருகிறார்கள் என்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் சச்சிதானந்தம் என்றும் மேற்படி வழக்கில் அயிட்டம் 2 சொத்தில் செக்குப்பந்தியில் சச்சிதானந்தம் இடத்திற்கு தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சச்சிதானந்தம் என்பது பிரதிவாதிகளின் தகப்பனாரைக் குறிக்கும் என்றும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு

தென்புறத்தில் பாத்தியம் உள்ளதாக கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ள வாதிகள் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் தென்புறத்தில் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்ய வேண்டி உண்மைக்கு புறம்பான சங்கதிகளை கண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் பிரதிவாதிகளின் தாயாரான விஜயலட்சுமியை கட்சி சேர்த்தாமல் வாதிகளால் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தாவா சொத்தில் உள்ள நிலை அம்சங்களையும், அளவுகளையும் நிரூபிக்க நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமிக்க அனுமதி பெறாத நிலையில் வழக்குரை சங்கதிகளை மட்டுமே வைத்து தாவா சொத்துகளின் நிலை அம்சங்களை வாதிகள் நீதிமன்றத்திற்கு நிரூபிக்க முற்பட்டுள்ளது சட்டத்திற்கு புறம்பானது என்றும் வாதிகள் தரப்பில் எந்த மூல ஆவணத்தை கொண்டு தாவா சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்பதை தெளிவுபடக் கூறாத நிலையில் மேற்படி பாகப்பிரிவினை மோசடியான ஒன்று என்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் சச்சிதானந்தின் தகப்பனார் கணபதி பண்டாரம் கடந்த 24.08.1927 ல் ஒரு வெங்கடரமண செட்டியாரிடம் கிரயம் பெற்றுள்ள இடத்திற்கு செக்குபந்தியாக தென்புறம் கிருஷ்ணசாமி முதலியார் காலிநிவேசனம் என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றும் பிரதிவாதிகளின் முன்னோர் கணபதி பண்டாரம் கிரயம் பெற்ற சொத்துகளில் வாரிசுரிமைப்படி பிரதிவாதிகளும் பிரதிவாதிகளின் தாயாரும் சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றும் வாதிகள் பிரதிவாதிகள் மீது தாவா தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு காங்கயம் காவல் நிலையத்தில் பல பொய் புகார்களை கொடுத்து அந்த புகாரில் வாதிகளுக்கு தேவையான விபரங்களையும் சங்கதிகளையும் பிரதிவாதிகள் செய்ய முற்படுவதுபோல் காட்டி வாதிகளே பிரதிவாதிகளின் சொத்துகளை இடித்து தரைமட்டமாக்கி அராஜக செயல்களை செய்து விட்டார்கள் என்றும் வாதிகள் பிரதிவாதிகளின் சொத்துகளை அபகரிக்க

வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் பிரதிவாதிகளின் தாயாரை கட்சி சேர்த்தால் வாதிகளின் பொய்யான சங்கதிகள் வெளிப்பட்டுவிடும் என்ற காரணத்தினாலேயே மேற்படியாரை கட்சி சேர்த்தாமல் இத்தாவாவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

**9. எழுவினாக்கள்1 முதல் 3 க்கானதீர்வு:–**

| | |
|---|---|
| **எழுவினா– 1** | தாவா சொத்துக்கள் வாதிகளின் தனிப்பட்ட சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் உள்ளது என்பது உண்மையா? |
| **எழுவினா– 2** | வாதிகளுக்கு தாவாவில் கோரியுள்ளபடி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |
| **எழுவினா– 3** | அவசிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தால் தாவா பாதிப்படைந்துள்ளது என்பது உண்மையா? |

10. வாதிகள் தரப்பில் தாவா சொத்தான பழைய க.ச.எண். 1204 புதிய ரீ.ச.எண்.476/26 பு.ஹெக்.0.07.5 விஸ்தீர்ண பூமியைப் பொறுத்து ஒரு கிருஷ்ணசாமி முதலியார் கடந்த 01.02.1934 தேதியில் வாதிகளின் மூதாதையர்களான அண்ணாமலை செட்டியாருக்கு கிரையம் கொடுத்து மேற்படியார் வழக்கு சொத்தில் கட்டிடங்கள் கட்டியும் அதனை சுற்றி மதில் சுவர் கட்டியும் தனது காலம் வரை அனுபவித்து வந்து, தனது ஒரே மகனான காசிநாத செட்டியாரை வாரிசாக விட்டுவிட்டு காலமாகி விட்டபின் மேற்படியார் தாவா சொத்துக்களில் உரிமையடைந்து அனுபவம் செய்து வந்து தனது ஒரே மகனான வாதிகளின் தகப்பனாரான சிவாச்சலம் செட்டியாரை வாரிசாக விட்டு விட்டு இறந்ததற்கு பின்னிட்டு மேற்படியார் அனுபவம் செய்து வந்து தாவா சொத்தில் சுமார் 80 ஆண்டுகளாக வாதிகளின் முன்னோர்களின் தொடர்ச்சியான அனுபவத்தின் அடிப்படையில் தாவா சொத்தைப் பொறுத்து புதிய நத்தம்

எண்.476/26 பு.ஹெக்டேர். 0.07.50 நிலத்தைப் பொறுத்து சிவாச்சலம் செட்டியார் பெயருக்கு நத்தம் பட்டா வழங்கப்பட்டது என்றும் பின்னிட்டு வாதிகள் மற்றும் வாதிகளின் தகப்பனார் தாவா சொத்துக்களை கடந்த 16.06.2014 தேதியன்று பாகப்பிரிவினை செய்து கொண்டு அதில் தாவா 1ம் அயிட்ட சொத்து 1ம் வாதிக்கும், தாவா 2ம் அயிட்ட சொத்து 2ம் வாதிக்கும் பாத்தியப்பட்டு தாவா சொத்துக்களை முழுமையான உரிமையாளர்களாக இருந்து வரி வகைகளை செலுத்தி அனுபவித்து வருகிறார்கள் என்றும் பிரதிவாதிகள் தாவா சொத்தை பொறுத்தவரை அந்நியர்கள் என்றும் கடந்த 06.04.2019 மற்றும் 20.01.2020ம் தேதிகளில் தாவா சொத்தின் முன் பக்கத்தில் பிரதிவாதிகள் வேண்டுமென்றே கூடுதலாக பூட்டினை போட்டு பூட்டி வாதிகளின் அனுபவத்தை இடைஞ்சல் செய்தார்கள் என்றும் எனவே தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக இவ்வழக்கை தாக்கல் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்றும் சொல்லப்பட்டு வாதிகள் தரப்பு சங்கதிகளை நிரூபணம் செய்யும் வகையில் 1ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.20 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

11. பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி சங்கதிகள் மறுக்கப்பட்டு பிரதிவாதிகளின் முன்னோரான ஒரு கணபதி பண்டாரம் கடந்த 1927ம் வருடம் வாதிகளின் முன்னோர்கள் பெற்ற அதே காலையில் 1204ல் குறிப்பிட்ட செக்குப்பந்திகள் கண்டு தற்போது பிரதிவாதிகள் உபயோகித்து வரும் பூமி மற்றும் கட்டிடங்களை ஒரு வெங்கட்ரமண செட்டியார் என்பவரிடம் கிரையம் பெற்றுள்ளார் என்றும் கணபதி பண்டாரத்திற்குப் பின்னிட்டு மேற்படி சொத்தை அவரது வாரிசுகள் அனுபவித்து வந்து தற்போது கணபதி பண்டாரம் கிரையம் பெற்ற சொத்துக்களை எவ்வித பாகப்பிரிவினைகளும் செய்யாமல் பிரதிவாதிகள்

தங்களது அனுபவ சுவாதீனத்தில் வைத்து வாழ்ந்து வருகிறார்கள் என்றும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் தென்புறத்தில் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்ய வேண்டி உண்மைக்கு புறம்பான சங்கதிகளை கண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் பிரதிவாதிகளின் தாயாரான விஜயலட்சுமியை கட்சி சேர்த்தாமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பி.வா.சா.1 முதல் பி.வா.சா.ஆ,7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. தாவா சொத்துக்கள் முழுவதும் அண்ணாமலை செட்டியார் என்பவர் பெயரிலான 01.02.1934 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் அடிப்படையில் வாதிகளுக்கு பாத்தியப்பட்டு வாதிகளின் தகப்பனார் பெயரில் வழங்கப்பட்ட நத்தம் பட்டாவின் அடிப்படையில் வாதிகளின் தனிப்பட்ட சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் இருந்து வருகிறது என்று வாதிகள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளைப் பொறுத்து இந்நீதிமன்றம் பரிசீலிக்கும்போது வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.19 ஆவணமாக 01.02.1934 தேதியிட்ட அண்ணாமலை செட்டியார் என்பவருக்கு கிருஷ்ணசாமி முதலியார் ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

13. மேற்படி ஆவணத்தை பரிசீலிக்கும்போது வா.சா.ஆ.19 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் இ.ச.1204 நெ. பு.ஏ.10.48 க்கு 5.14.0 இதில் காங்கயத்திலிருந்து திருப்பூர் போகும் ரோட்டுக்கும் மேற்கு, புதிதாக ஏற்பட்டிக்கும் கிழமேல் வீதிக்கும் வடக்கு, புதிதாக ஏற்பட்டிருக்கும் தென்வடல் வீதிக்கும்

கிழக்கு, **<u>சர்வேயர் கணபதிபண்டாரம் வீட்டுக்கும் தெற்கு</u>** இதன் மத்தியில் பு.ஏ.0.17 இந்த பூமி பூராவும் ஷை பூமிக்கு சம்பந்தப்பட்ட தடங்கள் சகிதம் என்று கண்டு கிரையம் பெறப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.19 ஆவணத்தின் பரிசீலனையில் இருந்து செக்குபந்தி கண்டு அண்ணாமலை செட்டியார் என்பவரால் தாவா சொத்தான இ.ச.1204 நெ. பு.ஏ.10.48 பூமியில் பு.ஏ.0.17 நிலமானது காலியிடமாக கிரையம் பெறப்பட்டுள்ளது என்பதும் மேற்படி கிரைய சொத்தின் வடபுறத்தில் கணபதி பண்டாரம் என்பவரின் வீடும் மற்ற மூன்று பக்கங்களில் சாலைகளும் உள்ளது என்பது தெரிய வருகிறது.

14. வழக்குரை சொத்து விபரத்தை பரிசீலிக்கும்போது அதில் தாவா 1வது அயிட்ட சொத்தாக ரீசர்வே எண்.476/26 நெ. பு.ஹெக்.0.07.50 இதில் 4050 சதுரடி இதற்கு 346.40 ச.மீ. இடமும் இதில் கட்டியுள்ள ஆர்சிசி மற்றும் ஓட்டுவில்லை கட்டிடங்களும் மின் இணைப்பு எண்கள் SC1. 650 குடிநீர் குழாய் இணைப்பு எண்.WSC 813 கதவு நெம்பர் 666, 668, 670, 672, 674 என்றும் தாவா 2வது அயிட்ட சொத்தாக ரீசர்வே எண்.476/26 நெ. பு.ஹெக்.0.07.50 இதில் 4026 சதுரடி இதற்கு 374.16 ச.மீ. இடமும் இதில் கட்டியுள்ள ஆர்சிசி மற்றும் ஓட்டுவில்லை கட்டிடங்களும் மின் இணைப்பு எண்கள் SC.404, 291 கதவு நெம்பர் 658, 660, 662, 664 என்றும் கண்டுள்ளது.

15. வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.3 ஆவணமாக சிவாசலம் செட்டியார் மற்றும் 1, 2 வாதிகளுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட 16.06.2014 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பரிசீலிக்கும்போது அதில் வாதிகளின் தகப்பனாரான சிவாசலம் செட்டியாருக்கு ஏ அட்டவணை சொத்தாக ரூ.2,00,000/- பொதுக்குடும்ப நிதியும், 1ம் வாதி காசிநாதன் என்பவருக்கு பி அட்டவணை சொத்தாக வழக்குரை தாவா 1வது அயிட்ட

சொத்துக்களும், 2ம் வாதி செந்தில்குமார் என்பவருக்கு சி அட்டவணை சொத்துக்களாக வழக்குரை தாவா 2வது அயிட்ட சொத்துக்களும் பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

16. மேற்படி வா.சா.ஆ.19 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களின் பரிசீலனையில் இருந்து வாதிகளின் மூதாதையாரான அண்ணாமலை செட்டியார் என்பவர் வா.சா.ஆ.19 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் தாவா இ.ச.எண்.1204 பூமியில் பு.ஏ.0.17 சென்ட் பூமியை மட்டுமே கிரையம் பெற்றுள்ள நிலையில் வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணமானது தாவா சொத்தான ரீ.ச.எண்.476/26 பூமியில் 8076 சதுரடிகள் அதாவது பு.ஏ.0.18–1/2 சென்ட் பூமிகளைப் பொறுத்து வாதிகளால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேலும் வழக்குரை சொத்து விபரமாக வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணத்தில் 1, 2 வாதிகளுக்கு பாகம் ஒதுக்கப்பட்டுள்ள பி மற்றும் சி அட்டவணை சொத்துக்களான 8076 (பு.ஏ.0.18–1/2) சதுரடிகள் பூமிகள் மற்றும் அதில் உள்ள கட்டிடங்கள் மின் இணைப்புக்கள் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளது.

17. வாதிகள் தரப்பில் தாவா சொத்துக்களை வாதிகளின் முன்னோர்கள் 80 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் செய்து வந்ததன் அடிப்படையில் தாவா சொத்துக்களைப் பொறுத்து வாதிகளின் தகப்பனார் சிவாச்சலம் செட்டியார் பெயரில் புதிய நத்தம் எண்.476/26 பு.ஹெக்.0.07.50ல் நத்தம் பட்டா வழங்கப்பட்டது என்றும் அதன் அடிப்படையில் வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணம் வாதிகளால் ஏற்படுத்தப்பட்டு தாவா சொத்துக்களை வாதிகள் சுவாதீனத்தில் வைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும்

சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணத்தை பரிசீலிக்கும்போது **அதில் நம்மில் 1ம் இலக்கமிட்டவருக்கு காங்கயம் கிராமம் மனைவரி பட்டா எண்.2078ன்படி பாத்தியப்பட்ட பூர்வீக பொதுக்குடும்ப சொத்தினையும்** என்று கண்டுள்ளது. ஆனால் வாதிகள் தரப்பில் வாதிகளின் தகப்பனாரான சிவாச்சலம் செட்டியார் என்பவர் பெயருக்கு வழங்கப்பட்ட மனைவரி பட்டா எண்.2078 ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை.

18. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்களான 10.02.2020 தேதியிட்ட நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டா மற்றும் நத்தம் நிலவரித்திட்ட தூய அடங்கல் பதிவேட்டை பரிசீலிக்கும்போது தாவா சொத்துக்களான புல எண்.476/26 பு.ஹெக்.0.07.50 (பு.ஏ.0.18–1/2 சென்ட்) ரயத்துவாரி பூமியைப் பொறுத்து **பட்டா எண்.2078** ல் 1, 2 வாதிகள் பெயருக்கு மேற்படி ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.20 ஆவணமான நத்தம் புல எண்.476/26க்கான நத்தம் சிட்டாவை பரிசீலிக்கும்போது பட்டா எண்.3938ல் பு.ஹெக்.0.7.50 (பு.ஏ.0.18–1/2 சென்ட்) பூமியைப் பொறுத்து 1, 2 வாதிகளுக்கு மேற்படி ஆவணம் வழங்கப்பட்டுள்ளது.

19. வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் **என்னுடைய பாட்டனார் கிரயம் பெற்ற சொத்துகளுக்கு கிழபுறமும் மேல்புறமும் தென்வடல் சாலை உள்ளது என்றால் சரிதான். வடபுறம் கணபதி பண்டாரம் என்பவருக்கு பாத்தியப்பட்டது தென்புறம் சாலை உள்ளது. என் பாட்டனார் கிரயம் பெற்ற சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1934 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் 17 சென்ட் நிலத்தை அவர் கிரயம் பெற்றார். அந்த 17 சென்ட் நிலத்தைப் பொறுத்து நானும் செந்தில்குமாரும் பாகம் செய்து கொண்டோமா என்றால் 2014 ஆம்**

<u>**ஆண்டு பாகம் செய்து கொண்டோம் எங்களுக்கு அனுபவத்தின் அடிப்படையில் 18–1/2 சென்ட் அங்கு பாத்தியப்பட்டிருந்தது. என் பாட்டனார் கிரயம் பெற்ற ஆவணத்தில் 17 சென்ட் என்று கண்டுள்ள நிலையில் மீதமுள்ள 1–1/2 சென்ட் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் 1934 ஆம் ஆண்டு என் தாத்தா கட்டிடங்கள் கட்டி அனுபவம் செய்து வந்ததன் அடிப்படையில் பாத்தியம். அந்த 1–1/2 சென்ட் நிலம் யாருக்கு பாத்தியம் என்றால் நத்தம் ரீசர்வே பட்டாவில் எங்களுக்கு 18–1/2 சென்டிற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது**</u> என்று சாட்சியம் அளித்துள்ளார்.

20. வா.சா.1ன் சாட்சியம் மற்றும் வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்து தாவா சொத்தின் தென்புறம், கிழபுறம் மற்றும் மேல்புறத்தில் சாலைகளும் வடபுறத்தில் பிரதிவாதிகளின் முன்னோரான கணபதி பண்டாரம் என்பவர் கிரையம் பெற்ற பூமிகளும் அமைந்துள்ளது என்பது தெரிய வருகிறது. பிரதிவாதிகள் தரப்பில் பிரதிவாதிகளுக்கு தாவா சொத்திற்கு தென்புறத்தில் பாத்தியப்பட்ட சொத்துக்களை அபகரிப்பதற்காகவே வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ.19 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் வாதிகளின் முன்னோரான அண்ணாமலை செட்டியார் என்பவர் தாவா சொத்தான இ.ச.எண்.1204ல் பு.ஏ.0.17 சென்ட் பூமியை மட்டுமே பிரதிவாதிகளின் முன்னோரான கணபதி பண்டாரம் பூமிக்கு தெற்கு என செக்குபந்தி கண்டு கிரையம் பெற்றுள்ள நிலையில் வா.சா.ஆ.19 ஆவணத்தில் கண்டுள்ள விஸ்தீரணத்தை விட கூடுதலாக உள்ள பு.ஏ.0.1–1/2 செண்ட் பூமியானது வாதிகளுக்கு எந்த ஆவணங்களின் அடிப்படையில் பாத்தியம் என்பதைப் பொறுத்து வாதிகள் தரப்பில் உரிமை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

21. வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் என் பாட்டனார் கிரயம் பெற்ற ஆவணத்தில் 17 சென்ட் என்று கண்டுள்ள நிலையில் மீதமுள்ள 1–1/2 சென்ட் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் 1934 ஆம் ஆண்டு என் தாத்தா கட்டிடங்கள் கட்டி அனுபவம் செய்து வந்ததன் அடிப்படையில் பாத்தியம் என்றும் அந்த 1–1/2 சென்ட் நிலம் யாருக்கு பாத்தியம் என்றால் நத்தம் ரீசர்வே பட்டாவில் எங்களுக்கு 18–1/2 சென்டிற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இதன்மூலம் தாவா சொத்தில் கூடுதலாக உள்ள பு.ஏ.0.1–1/2 சென்ட் பூமியைப் பொறுத்து வாதிகள் மற்றும் வாதிகளின் முன்னோர்கள் பெயரில் உரிமை ஆவணங்கள் எதுவும் இல்லை என்பதும் வாதிகளின் தகப்பனாருக்கு தாவா சொத்துக்களான பு.ஏ.0.18–1/2 பூமிகளைப் பொறுத்து வழங்கப்பட்ட நத்தம் பட்டா எண்.2078 அடிப்படையில் தான் கூடுதல் விஸ்தீரணமான பு.ஏ.0.1–1/2 சென்ட் பூமிகளையும் சேர்த்து தாவா சொத்துக்களைப் பொறுத்து வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது.

22. வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்து வா.சா.ஆ.19 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் வாதிகளின் முன்னோரான அண்ணாமலை செட்டியார் தாவா சொத்தில் பு.ஏ.0.17 சென்ட் பூமியை மட்டுமே செக்குபந்தி கண்டு கிரையம் பெற்றுள்ள நிலையில் அதைவிட கூடுதலாக புஏ.0.1–1/2 விஸ்தீரணத்தை சேர்த்து பு.ஏ.0.18–1/2 செண்ட் பூமிக்கு நத்தம் பட்டா வாதிகளின் தகப்பனார் பெயருக்கு வழங்கப்பட்டுவிட்ட காரணத்தினாலேயே மேற்கண்ட வா.சா.ஆ.19 ஆவணத்தில் கண்டுள்ள கிரைய சொத்தை விட கூடுதல் விஸ்தீரணமான பு.ஏ.0.1–1/2 சென்ட் பூமிகள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டுள்ளதாக கருத இயலாது.

23. இந்நீதிமன்றம் மாண்பமை உச்சநீதிமன்றத்தின் முன்தீர்ப்புரையான Suraj Bhan and others Vs. Financial Commissioner and others Appeal (Civil) 971 of 2007 dated 16.04.2007 என்ற முன் தீர்ப்புரையை கவனமாக பரிசீலித்தபோது அதில் It is well settled that an entry in Revenue records does not confer title on a person whose name appears in record of rights. It is settled law that entries in the revenue records or jamabandi have only 'fiscal purpose' i.e payment of land revenue and no ownership is conferred on the basis of such entries என்று சொல்லப்பட்டுள்ளது. மேற்படி மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் முன்தீர்ப்பின்படி பட்டாவை மட்டும் வைத்து ஒருவர் சொத்தில் உரிமை கொண்டாட முடியாது. பட்டா ஒருவருக்கு வழங்கப்பட்டுவிட்டதாலேயே அந்த சொத்து அவருக்கு உரிமை உடையதாகிவிடாது என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

24. வாதிகளின் முன்னோரான அண்ணாமலை செட்டியார் வா.சா.ஆ.19 ஆவணத்தின் அடிப்படையில் தாவா புல எண்.1204 ரீ.ச.எண்.476/26 பூமியில் பு.ஏ.0.17 சென்ட் பூமியை மட்டுமே செக்குபந்தி கண்டு கிரையம் பெற்றுள்ள நிலையில் மேற்படி பூமியை விட கூடுதலாக புஏ.0.1–1/2 விஸ்தீரணத்தை சேர்த்து பு.ஏ.0.18–1/2 செண்ட் பூமிக்கு நத்தம் பட்டா வாதிகளின் தகப்பனார் பெயருக்கு வழங்கப்பட்டுவிட்ட காரணத்தினாலேயே வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.20 நத்தம் பட்டாவின் அடிப்படையில் மேலேசொன்ன கூடுதல் விஸ்தீரணமான பு.ஏ.0.1–1/2 சென்ட் பூமியை பொறுத்து வாதிகள் உரிமை கோர இயலாது. மேலும் வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்து தாவா சொத்துக்களில் மேற்படி வா.சா.ஆ.19 கிரைய ஆவணத்தில் கண்டுள்ள பு.ஏ.0.17 சென்ட் விஸ்தீரணத்தை விட கூடுதலாக உள்ள பு.ஏ.0.1–1/2 சென்ட் பூமியைப் பொறுத்து தான் உபய தரப்பினர்களுக்கிடையே பிரச்சனை ஏற்பட்டுள்ளது

என்பதை அறிய முடிகிறது. இந்நிலையில் தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகள் இவ்வழக்கில் விளம்புகை பரிகாரம் எதுவும் கோரவில்லை.

25. வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.12 ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்துக்களை ஒட்டி வடபுறமுள்ள சொத்தின் உரிமையாளர் ஒரு தேவகி என்றும் பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை ஒட்டி வடபுறத்தில் உள்ள சொத்திற்கு எந்த விதத்திலும் சம்பந்தமில்லாத மூன்றாம் நபர்கள் என்றும் தாவா சொத்தில் வாதிகளின் அனுபவ சுவாதீனத்தை பிரதிவாதிகள் இடையூறு செய்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தின் வடபுறம் பிரதிவாதிகளின் முன்னோரான கணபதி பண்டாரம் என்பவர் கிரையம் பெற்று அனுபவம் செய்து வந்ததாகவும் வாரிசு முறையில் மேற்படி சொத்துக்களை பிரதிவாதிகள் தற்போது கூட்டாக அனுபவம் செய்து வருவதாகவும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தின் தென்புறத்தில் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்ய வேண்டி வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

26. மேற்படி சங்கதிகளைப் பொறுத்து இந்நீதிமன்றம் பரிசீலிக்கும்போது வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.11 ஆவணமாக 24.08.1927 தேதியிட்ட ஒரு கணபதி பண்டாரம் என்பவருக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள கிரைய ஆவணத்தை பரிசீலிக்கும்போது கணபதி பண்டாரம் என்பவர் இ.ச.1204 காலையில் **<u>கிருஷ்ணசாமி முதலியார் காலி நிவேசனத்துக்கு வடக்கு</u>** என கண்டு இ.ச.1204 நெ. 10.48 ல் 0.10 பூமிகளை கிரையம் பெற்றுள்ளார். வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்து வா.சா.ஆ.19 கிரைய ஆவணம் ஏற்படுத்தப்படுவதற்கு முன்பே தாவா சொத்தை ஒட்டி வடபுறத்தில் உள்ள சொத்துக்களைப் பொறுத்து கணபதி பண்டாரம் பெயரில் வா.சா.ஆ.11

கிரைய ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணமான சச்சிதானந்தம் என்பவரின் வாரிசு சான்றிதழை பரிசீலிக்கும்போது மேற்படியாரின் மனைவி விஜயலட்சுமி மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகள் மேற்படியாரின் வாரிசுகள் என கண்டு வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

27. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.6 ஆவணமான விஜயலட்சுமி என்பவரின் வாரிசு சான்றிதழை பரிசீலிக்கும்போது மேற்படியாருக்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் வாரிசுகள் என கண்டு வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் பரிசீலனையில் இருந்து மேற்படி கணபதி பண்டாரம் என்பவரின் மகனான சச்சிதானந்தம் என்பவரின் வாரிசுகள் தான் பிரதிவாதிகள் என்பதை அறிய முடிகிறது. இதைப் பொறுத்து உபய தரப்பினர்களால் மறுக்கப்படவில்லை. பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.2 ஆவணமாக கணபதி பண்டாரம் என்பவர் பெயரிலான 11.10.2022 தேதியிட்ட மின் இணைப்பு எண்.289 க்கான மின் கட்டண ரசீதும், பி.வா.சா.ஆ.3 ஆவணமாக 07.09.2021 தேதியிட்ட சச்சிதானந்தம் என்பவர் பெயரிலான குடிநீர் கட்டண ரசீதும், பி.வா.சா.ஆ.7 ஆவணமாக 16.03.2015 தேதியிட்ட விஜயலட்சுமி பெயரிலான குடிநீர் கட்டண இணைப்பு ரசீதும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

28. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.12 ஆவணமான 05.08.2016 தேதியிட்ட லட்சுமி (எ) லட்சுமியம்மாள் என்பவர் ஒரு தேவகி என்பவருக்கு ஏற்படுத்திக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை பரிசீலிக்கும்போது பழைய க.ச.1204 நெ. ரீ.ச.எண்கள்.476/23, 476/24, 476/25

தற்பொழுது நத்தம் சர்வே எண்.476/23, 476/24-A, 476/24-B, 476/25 பூமிகளைப் பொறுத்து மேற்படி ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேற்படி ஆவணத்தில் செக்குபந்தியாக கிருஷ்ணசாமி முதலியார் வகையறாவிடம் இருந்து கிரையம் பெற்ற **காசிநாதன் செட்டியார் வகையறா சொத்துக்கும் வடக்கு** என்று கண்டுள்ளது. மேற்படி ஆவணத்தின் பரிசீலனையில் இருந்து லட்சுமியம்மாள் என்பவர் கடந்த 05.08.2016 தேதியில் அவரது மகளான தேவகி என்பவருக்கு தாவா சொத்தை ஒட்டி வடபுறம் அமைந்துள்ள 5100 சதுரடிகள் கொண்ட இடத்தில் குறிப்பிட்ட செக்குபந்திக்குள் 1312-1/2 சதுரடி பூமிகளைப் பொறுத்து மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

29. மேலும் வா.சா.ஆ.12 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை பரிசீலிக்கும்போது அதில் பழைய க.ச.எண்.1204 ரீ.ச.எண்.476/23 முதல் 476/25 நத்தம் சர்வே எண்.476/23, 476/24A, 476/24B மற்றும் 476/25 ஆகிய பூமிகளைப் பொறுத்து தாராபுரம் சார்பு நீதிமன்ற அ.வ.எண்.57/1992 மாண்புமிகு ஈரோடு முதல் கூடுதல் மாவட்ட நீதிமன்ற A.S.No.164/2002 மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் S.A.No.1159/2025 ஆகிய வழக்குகளின் தீர்ப்புகளின் அடிப்படையில் மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக அதில் கண்டுள்ளது. மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்துடன் மாண்பமை தாராபுரம் சார்பு நீதிமன்றத்தின் அ.வ.எண்.57/1992 வழக்கின் 18.07.2000 தேதியிட்ட தீர்ப்புரை மேல்முறையீட்டு எண்.164/2002 வழக்கில் மாண்பமை ஈரோடு முதல் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் 18.11.2003 தேதியில் வழங்கிய தீர்ப்புரை மற்றும் இ.மே.மு.எண்.1159/2005 வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம்

27.02.2014 தேதியில் வழங்கிய தீர்ப்புரை மற்றும் 03.07.1973 தேதியிட்ட உயில்ஆவணம் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன.

30. மேற்படி வா.சா.ஆ.12 செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் அதனோடு இணைக்கப்பட்டுள்ள தீர்ப்புரை மற்றும் ஆவணங்களை பரிசீலிக்கும்போது தாவா சொத்தை ஒட்டி வடபுறம் அமைந்துள்ள சொத்தைப் பொறுத்து கணபதி பண்டாரம் என்பவரால் மேற்படியாரின் மருமகளான லட்சுமி (எ) லட்சுமியம்மாளுக்கு 03.07.1973 தேதியில் மேற்படியாரால் உயில் ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும் அது சம்பந்தமாக ஏற்பட்ட வழக்குகளில் பிரதிவாதிகளின் தகப்பனாரான சச்சிதானந்தம் என்பவரும் தரப்பினராக இருந்துள்ளார் என்பதையும் அறிய முடிகிறது. இந்நிலையில் இ.மே.மு.எண்.1159/2005 வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 27.02.2014 தேதியில் வழங்கிய தீர்ப்புரைக்கு எதிராக மேல்முறையீடு நிலுவையில் உள்ளதாக பிரதிவாதிகள் தரப்பில் குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை. எனவே மேற்படி தீர்ப்புரை பிரதிவாதிகளையும் கட்டுப்படுத்தும்.

31. பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் <u>என் தாத்தா கணபதிபண்டாரம் என்பவர் என் சித்தப்பா மனைவி லட்சுமி என்பவருக்கு தாவா சொத்துக்களை பொறுத்து உயில் ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு அந்த உயில் ஆவணமானது தாராபுரம் சார்பு நீதிமன்றம் அ.வ.எண்.57/1992 மற்றும் ஈரோடு முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு வழக்கு எண்.164/2002 மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கு எண்.1159/2005 ஆகிய வழக்குகளில் உறுதி செய்யப்பட்டு லட்சுமி என்பவருக்கு எங்கள் சொத்துக்கள் முழுவதும்</u>

**பாத்தியப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படிவீதம் எங்கள் சொத்துக்களை உரிமையடைந்த லட்சுமி தனது மகளான தேவகி என்பவருக்கு அந்த சொத்துக்களை தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் பாத்தியப்படுத்தி அவர்கள் தான் சுவாதீனத்திலிருந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் அது பொய்** என்று சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் தாவா சொத்தை ஒட்டி வடபுறம் உள்ள சொத்துக்களில் பிரதிவாதிகளுக்கு உரிமையும் அனுபவமும் உள்ளது என்பதைப் பொறுத்து பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

32. வா.சா.3 தனது குறுக்கு விசாரணையில் **தாவா சொத்தின் வடபுறம் 1921 கிரய ஆவணத்தின்படி பழனியப்ப பண்டாரம் என்பவருக்கு பாத்தியப்பட்ட பூமி உள்ளது என்றால் இல்லை லட்சுமியம்மாள் பூமி உள்ளது. லட்சுமியம்மாள் பெயரிலான கிரைய ஆவணத்தை நான் பார்த்து உள்ளேனா என்றால் இல்லை. 1982ல் இருந்து லட்சுமியம்மாள் தான் தாவா சொத்தின் வடபுறம் இருந்து வருகிறார்** என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வா.சா.ஆ.12 ஆவணம் மற்றும் அதில் கண்டுள்ள இணைப்புகளில் இருந்து தாவா சொத்திற்கு ஒட்டி வடபுறமுள்ள சொத்தானது லட்சுமி (எ) லட்சுமியம்மாள் என்பவருக்கு உரிமைப்பட்டது என்பதும் அதன் அடிப்படையில் மேற்படியாரால் தனது மகளான தேவகி என்பவருக்கு வா.சா.ஆ.12 செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதும் தெளிவாகிறது.

33. இந்நிலையில் வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணத்தில் சி அட்டவணை சொத்தின் வடக்கு எல்லையாக பிரதிவாதிகளின் தந்தை சச்சிதானந்தத்திற்கு பாத்தியப்பட்டுள்ள இடம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதை

மட்டும் அடிப்படையாக கொண்டு தாவா சொத்துக்களை ஒட்டி வடபுறம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டுள்ள சொத்து உள்ளதாக தீர்மானம் செய்ய இயலாது. மேலும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.2, பி.வா.சா.ஆ.3, பி.வா.சா.ஆ.7 ஆகிய ரசீதுகள் தாவா சொத்திற்கு தென்புறமுள்ள பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து ஏற்பட்ட ஆவணங்கள் என்பதை நிரூபணம் செய்யும் வகையில் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியங்கள் எதுவும் முன்னிடப்படவில்லை.

34. தாவா சொத்திற்கு வடபுறத்தில் பிரதிவாதிகளின் பாட்டனாரான ஒரு கணபதி பண்டாரம் என்பவர் கிரையம் பெற்ற சொத்துக்களை வாரிசு முறைப்படி பிரதிவாதிகளும் மேற்படியாரின் தாயாரும் அடைந்து சுவாதீனத்தில் வைத்து அனுபவம் செய்து வருவதாக பிரதிவாதிகள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள நிலையில் மேற்படி சங்கதியை நிரூபணம் செய்யும் பொறுப்பு பிரதிவாதிகள் வசமே உள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை நிரூபணம் செய்யும் வகையில் பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித உரிமை ஆவணங்களும் சாட்சியங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

35. மேலும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.4 புகைப்படங்களில் இருந்து எந்தவொரு சங்கதிகளையும் அறிய முடியவில்லை. மேலும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.12 ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தை ஒட்டி வடபுறத்தில் தற்போது லட்சுமியம்மாள் என்பவரின் மகளான தேவகி என்பவரின் சொத்துக்கள் தான் உள்ளது என்பது தெரிய வரும் நிலையில் மேற்படி சொத்தின் தெற்கு பக்க எல்லையில் வாதிகள் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிப்பதாக பிரதிவாதிகள் கூறுவதற்கு எவ்வித அடிப்படையும் இல்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

36. மேலும் வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்து வா.சா.ஆ.19 கிரைய ஆவணமானது தாவா சொத்துக்களில் பு.ஏ.0.17 சென்ட் பூமியைப் பொறுத்து மட்டுமே வாதிகளின் முன்னோரான ஒரு அண்ணாமலை செட்டியார் என்பவருக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள நிலையில் தாவா சொத்துக்களைப் பொறுத்த வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.20 நத்தம் பட்டாவானது வாதிகள் பெயருக்கு தாவா சொத்துக்களான பு.ஏ.0.18–1/2 பூமிகளைப் பொறுத்து வழங்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி கூடுதல் விஸ்தீரணமான பு.ஏ.0.1–1/2 பூமிகளைப் பொறுத்து வாதிகள் மற்றும் வாதிகளின் முன்னோர்கள் பெயரில் உரிமை ஆவணங்கள் எதுவும் இல்லாத நிலையில் அதைப் பொறுத்து வாதிகள் விளம்புகை பரிகாரம் எதுவும் கோரவில்லை.

37. மேலும் வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது தாவா சொத்துக்களில் காலியிடம் இல்லை என்பதும் அதில் கட்டிடங்கள் அமைந்துள்ளது என்பதும் உபய தரப்பினர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் தாவா சொத்தின் கதவு எண்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் கதவு எண்.600 என்று ஆரம்பிக்கும். தாவா சொத்தில் எத்தனை கதவு எண்கள் கொண்ட கட்டிடங்கள் உள்ளது என்றால் 11 கதவு எண்கள் கொண்ட கட்டிடங்கள் உள்ளது. மேற்படி கட்டிடங்கள் எப்போது கட்டப்பட்டது என்றால் 1947 ல் கட்டப்பட்டது என்றும் எங்களுக்கும் எங்கள் சொத்தில் தென்புறத்தில் கடை கட்டியுள்ள வாதிகள் வகையறாவிற்கும் தான் தற்போது பிரச்சனை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

38. மேலும் பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் **ரீ.ச.எண்.476/26 பூமியில் எங்களுக்கு ஏதேனும் உரிமைகள் உள்ளதா என்றால் இல்லை. அந்த பூமியை பொறுத்து நாங்கள் உரிமைகள் ஏதேனும் கேட்கிறோமா என்றால்**

<u>இல்லை. வாதிகள் சொத்தை பொறுத்து வாதிகள் இருவரும் பாகப்பிரிவினை செய்து கொண்ட வா.சா.ஆ.3 ஆவணத்தை பொறுத்து எனக்கு ஆட்சேபனைகள் ஏதேனும் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகள் வகையறா சொத்துக்களை பொறுத்து நான் பட்டா மற்றும் உரிமை ஆவணங்கள் ஏதேனும் பார்த்து உள்ளேனா என்றால் இல்லை</u> என்று சாட்சியம் அளித்துள்ளார்.

39. வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.6 ஆவணமாக 1ம் வாதி பெயரிலான சொத்து வரி ரசீதுகளும், வா.சா.ஆ.7 ஆவணமாக 14.02.2020 தேதியிட்ட 1ம் வாதி பெயரிலான மின் இணைப்பு எண்.650க்கான மின் கட்டண ரசீதுகளும், வா.சா.ஆ.8 ஆவணமாக 2ம் வாதி பெயரிலான சொத்து வரி ரசீதுகளும், வா.சா.ஆ.9 ஆவணமாக 2ம் வாதி பெயரிலான மின்கட்டண ரசீதுகளும், வா.சா.ஆ.13 மற்றும் வா.சா.ஆ.14 ஆவணங்களாக 1, 2 வாதிகள் பெயரிலான சொத்து வரி ரசீதுகளும், வா.சா.ஆ.15 ஆவணமாக 1, 2 வாதிகள் பெயரிலான மின் கட்டண ரசீதுகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

40. மேற்படி வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.13 முதல் வா.சா.ஆ.15 வரையிலான ஆவணங்கள் மற்றும் வாதிகள் தரப்பு சாட்சியங்கள் ஆகியவற்றின் பரிசீலனையில் இருந்து தாவா சொத்துக்களில் கதவு எண்.666, 670, 672, 674, 658, 660, 662, 664 ஆகிய எண் கொண்ட கட்டிடங்கள் அமைந்துள்ளது என்பதும் மேற்படி தாவா சொத்துக்களில் உள்ள கட்டிடங்கள் வாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதும் அதன் அடிப்படையிலேயே தாவா சொத்துக்களைப் பொறுத்த பட்டா உள்ளிட்ட வருவாய்த்துறை ஆவணங்கள் சொத்துவரி ரசீதுகள் மற்றும் மின் கட்டண ரசீதுகள் ஆகியவை வாதிகள் பெயருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது.

41. எனவே மேலேகண்ட பரிசீலனைகள் மற்றும் வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலானவர்களின் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.13 முதல் வா.சா.ஆ.15 வரையிலான தாவா சொத்துக்களைப் பொறுத்த வரிவிதிப்பு மற்றும் மின்கட்டண ரசீதுகள் மற்றும் வா.சா.ஆ.4, வா.சா.ஆ.5 ஆவணங்களான வாதிகள் பெயரிலான தாவா சொத்துக்களைப் பொறுத்த நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டா மற்றும் அடங்கல் பதிவேடு மற்றும் வா.சா.ஆ.20 ஆவணமான வாதிகள் பெயரிலான நத்தம் பட்டா ஆகியவற்றின் மூலம் வாதிகள் தாவா சொத்துக்களை சுவாதீனத்தில் வைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்ற சங்கதியானது வாதிகள் தரப்பில் போதுமான வரையில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

42. வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.17 ஆவணமாக 30.07.2022, 04.04.2023, 13.06.2023, 21.01.2024 தேதிகளிட்ட காங்கயம் காவல் நிலையத்தில் 1, 2 வாதிகளால் கொடுக்கப்பட்ட புகார் மனு ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.18 ஆவணமாக 06.06.2022 தேதியிட்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் Crl.O.P.No.10260/2022 உத்தரவை பரிசீலிக்கும்போது இவ்வழக்கின் 1ம் வாதியால் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக போலீஸ் பாதுகாப்பு கேட்டு தாக்கல் செய்யப்பட்ட மனுவானது மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.10 ஆவணமாக 2ம் வாதியால் காங்கயம் காவல் ஆய்வாளருக்கு கொடுக்கப்பட்ட புகார் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் மற்றும் வாதிகள் தரப்பு சாட்சியங்களின் பரிசீலனையில் இருந்து தாவா சொத்துக்களை வாதிகள் அனுபவம் செய்வதை பிரதிவாதிகள்

தொடர்ச்சியாக இடையூறு செய்த காரணத்தினாலேயே வாதிகளால் மேற்படி புகார்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

43. மேலும் தாவா சொத்தை ஒட்டி வடபுறமுள்ள சொத்துக்களைப் பொறுத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியமும் உரிமையும் அனுபவமும் உள்ளது என்பதைப் பொறுத்து பிரதிவாதிகள் தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படாத நிலையில் வா.சா.ஆ.12 ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தை ஒட்டி வடபுறமுள்ள சொத்துக்களைப் பொறுத்து ஒரு தேவகி என்பவருக்கு தான் பாத்தியமும் உரிமையும் உள்ளது என்பது ஊர்ஜிதமாகியுள்ள நிலையில் வா.சா.ஆ.4, வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.20 மற்றும் வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.9, வா.சா.ஆ.13 முதல் வா.சா.ஆ.15 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்துக்களை வாதிகள் தங்கள் சுவாதீனத்தில் வைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்பது ஊர்ஜிதமாகியுள்ள நிலையில் தாவா சொத்துக்களை வாதிகள் சுவாதீனத்தில் வைத்து அமைதியாக அனுபவம் செய்து வருவதை பொறுத்து இடையூறு செய்ய பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை.

44. மேலும் வழக்காவணங்கள் மற்றும் வாதிகள் தரப்பு சாட்சியங்களின் பரிசீலனையில் இருந்து தாவா சொத்தை ஒட்டி வடபுறத்தில் உள்ள சொத்துக்களைப் பொறுத்து ஒரு தேவகி என்பவருக்கு தான் பாத்தியம் உள்ளது என்பதும் பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை ஒட்டி வடபுறமுள்ள சொத்துக்களில் எவ்வித பாத்தியமும் அனுபவமும் இல்லை என்பதும் தாவா சொத்துக்களை வாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்பதும் ஊர்ஜிதமாகியுள்ள நிலையில் தாவா சொத்தில் வா.சா.ஆ.19 ஆவணத்தில் கண்டுள்ள விஸ்தீரணத்தை விட கூடுதலாக உள்ள பு.ஏ.0.1–1/2 சென்ட்

பூமியைப் பொறுத்து 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கோ அல்லது மேற்படி சொத்தின் அசல் உரிமையாளருக்கோ ஏதேனும் உரிமைகள் இருக்கும் பட்சத்தில் சட்டபடியான வழிவகைகள் (Due process of law) மூலம் நடவடிக்கைகள் எடுத்து மேற்படி சொத்தை சுவாதீனம் எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர அதைவிடுத்து தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகளின் சட்டப்படியான அனுபவத்தை இடையூறு செய்ய பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை.

45. மேலும் இவ்வழக்கானது 1 முதல் 4 பிரதிவாதிகள் தாவா சொத்தின் அனுபவத்தை பொறுத்து வாதிகளை இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் 1 முதல் 4 பிரதிவாதிகளின் தாயாரான விஜயலட்சுமி இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்றும் மேற்படியாரை இந்த வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றும் பிரதிவாதிகள் தரப்பில் முன்வைக்கப்பட்ட சங்கதிகள் ஏற்கும்படியாக இல்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

46. எனவே மேலேகண்ட பரிசீலனைகள் மற்றும் விவாதங்களின் அடிப்படையில் மேற்சொன்ன கூடுதல் விஸ்தீரணமான பு.ஏ.0.1–1/2 சென்ட் பூமியைப் பொறுத்து 1 முதல் 4 பிரதிவாதிகளோ அல்லது மேற்படி சொத்தின் அசல் உரிமையாளரோ சட்டபடியான வழிவகைகள் (Due process of law) மூலம் நடவடிக்கைகள் எடுத்து சுவாதீனம் எடுக்கும் காலம் வரையில் தாவா சொத்துக்களை வாதிகள் அமைதியான சுவாதீனத்தில் வைத்து அனுபவம் செய்து கொள்வதை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர வாதிகளுக்கு உரிமை உள்ளது. இந்நீதிமன்றம் AIR 2021 Suppreme Court 821, Airline 2021 SC 41 A.Subramanian and Another Vs. R.Pannerselvam என்ற மாண்பமை

உச்சநீதிமன்றத்தின் முன்தீர்ப்புரையை பரிசீலிக்கும்போது அதில் பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது.

> “The High Court was also right in its view that it is a common principle of law that even trespasser, who is in established possession of the property could obtain injunction”.
>
> The principle enumerated in judgment of Judicial Committe in Parry v. Clissold, (1907) AC 73 was noticed in paragraph 17 to the following effect.
> “It cannot be disputed that a person in possession of land in the assumed character of owner and excercising peaceably the ordinary rights of ownership has a perfectly good title agaisnt all the world but the righful owner. And if the rightful owner does not come forward as assert his little by the process of law within the period prescribed by the provisions of the statute of Limitation applicable to the case, his right is for ever extinguished and the possessory owner acquires an absolute title”

47. மேற்படி மாண்பமை உச்சநீதிமன்றத்தின் முன்தீர்ப்புரையை பரிசீலிக்கும்போது தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து நிறுவப்பட்ட அனுபவத்தில் உள்ள நபர் கூட மேற்படி சொத்தில் தனது நிறுவப்பட்ட அனுபவத்தை (Established Possession) நிரூபணம் செய்யும் பட்சத்தில் மேற்படி சொத்தின் உரிமையைப் பொறுத்து விளம்புகை கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பெற உரிமை உள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது.

48. இந்த வழக்கிலும் வா.சா.ஆ.19 ஆவணத்தின் அடிப்படையில் வாதிகளின் முன்னோரான அண்ணாமலை செட்டியார் என்பவர் தாவா சொத்தான இ.ச.1204 ரீ.ச.எண்.476/26 பூமியில் பு.ஏ.0.17 செண்ட் நிலத்தை கிரையம் பெற்றுள்ள நிலையில் வாதிகளின் தகப்பனார் பெயருக்கு தாவா சொத்தான ரீ.ச.எண்.476/26 பூமியில் நத்தம் பட்டா எண்.2078ல் தாவா சொத்தான பு.ஏ.0.18–1/2 செண்ட் பூமியைப் பொறுத்து பட்டா வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்தப்பட்டு

வாதிகள் பெயருக்கு தாவா சொத்தைப் பொறுத்து வா.சா.ஆ.4, வா.சா.ஆ.5 ஆன நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டா மற்றும் அடங்கல் பதிவேடு மற்றும் வா.சா.ஆ.20 ஆன நத்தம் பட்டா ஆகியவை வழங்கப்பட்டும் மேற்படி ஆவணங்கள் மற்றும் வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.9, வா.சா.ஆ.13 முதல் வா.சா.ஆ.15 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்துக்களை வாதிகள் தங்கள் சுவாதீனத்தில் வைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்பது வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ள நிலையிலும் தாவா சொத்தை ஒட்டி வடபுறமுள்ள பூமியில் பிரதிவாதிகளுக்கு பாத்தியமும் உரிமையும் அனுபவமும் உள்ளது என்று பிரதிவாதிகள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் பிரதிவாதிகள் தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படாததாலும் மேலேகண்ட பரிசீலனைகளின் அடிப்படையில் இந்த வழக்கில் முதன்மை தோற்ற வழக்கு சமநிலை நோக்கு மற்றும் ஈடு செய்ய முடியாத இழப்பு ஆகிய அனைத்து காரணிகளும் வாதிகளுக்கு ஆதரவாக உள்ளதாலும் மேலேகண்ட பரிசீலனைகளின்படியும் மேலேகண்ட முன்தீர்ப்புரையின் அடிப்படையிலும் மேலேசொன்ன கூடுதல் விஸ்தீரணமான பு.ஏ.0.1–1/2 சென்ட் பூமியைப் பொறுத்து 1 முதல் 4 பிரதிவாதிகளோ அல்லது மேற்படி சொத்தின் அசல் உரிமையாளரோ சட்டபடியான வழிவகைகள் (Due process of law) மூலம் நடவடிக்கைகள் எடுத்து சுவாதீனம் எடுக்கும் காலம் வரையில் தாவா சொத்துக்களை வாதிகள் அமைதியான சுவாதீனத்தில் வைத்து அனுபவம் செய்து கொள்வதை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர வாதிகளுக்கு உரிமை உள்ளது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

49. எனவே மேலேகண்ட பரிசீலனைகள் மற்றும் விவாதங்களின் அடிப்படையிலும், வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலானவர்களின் சாட்சியம்

மற்றும் பி.வா.சா.1ன் சாட்சியம் மற்றும் உபய தரப்பினர்களின் சான்றாவணங்களின் பரிசீலனைகளில் இருந்தும் வா.சா.ஆ.19 ஆவணத்தின் அடிப்படையில் வாதிகளின் முன்னோர் தாவா சொத்தான இ.ச.1204 ரீ.ச.எண்.476/26 பூமியில் பு.ஏ.0.17 சென்ட் நிலத்தை கிரையம் பெற்று வாதிகளின் தகப்பனார் பெயருக்கு தாவா சொத்தான ரீ.ச.எண்.476/26ல் பு.ஏ.0.18–1/2 சென்ட் பொறுத்து நத்தம் பட்டா எண்.2078 வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் வாதிகளால் வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்தப்பட்டும் வாதிகள் பெயருக்கு தாவா சொத்தைப் பொறுத்து வா.சா.ஆ.4, வா.சா.ஆ.5 ஆன நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டா மற்றும் அடங்கல் பதிவேடு மற்றும் வா.சா.ஆ.20 ஆன நத்தம் பட்டா வழங்கப்பட்டும் வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.13 முதல் வா.சா.ஆ.15 ஆகிய வரிவிதிப்புகள் மற்றும் மின் கட்டண ரசீதுகள் ஆகியவற்றின் அடிப்படையில் வாதிகள் தாவா சொத்துக்களை தங்கள் சுவாதீனத்தில் வைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்பது வாதிகள் தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாலும் தாவா சொத்தை ஒட்டி வடபுறம் ஒரு தேவகி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அமைந்துள்ளது என்பது ஊர்ஜிதமாகி உள்ளதாலும் பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தை ஒட்டி வடபுறம் அமைந்துள்ள சொத்துக்களில் பிரதிவாதிகளுக்கு உரிமையும் அனுபவமும் உள்ளது என்று சொல்லப்பட்ட சங்கதிகள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படாததாலும் தாவா சொத்தில் வா.சா.ஆ.19 ஆவணத்தில் கண்டுள்ள விஸ்தீரணத்தை விட கூடுதலாக உள்ள பு.ஏ.0.1–1/2 சென்ட் பூமியைப் பொறுத்து வாதிகள் பெயருக்கு நத்தம் பட்டா மற்றும் வருவாய்த்துறை ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டு வாதிகளால் அனுபவம் செய்து வரப்படும் நிலையில் தாவா சொத்தான இ.ச.எண்.1204 ரீ.ச.எண்.476/26

பு.ஏ.0.18−1/2 சென்ட் பூமிகளில் வா.சா.ஆ.19 கிரைய ஆவணத்தில் கண்டுள்ள விஸ்தீரணமான பு.ஏ.0.17 சென்ட் விஸ்தீரணத்தை விட கூடுதலாக உள்ள பு.ஏ.0.1−1/2 சென்ட் விஸ்தீரண பூமியைப் பொறுத்து 1 முதல் 4 பிரதிவாதிகளோ அல்லது அந்த சொத்தின் அசல் உரிமையாளரோ சட்டபடியான வழிவகைகள் (Due process of law) மூலம் நடவடிக்கைகள் எடுத்து சுவாதீனம் எடுக்கும் காலம் வரையில் தாவா சொத்துக்களை வாதிகள் அமைதியான சுவாதீனத்தில் வைத்து அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ அல்லது வேறு யாரும் எவ்விதத்திலும் எந்த வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து 1 முதல் 3 எழுவினாக்களுக்கு தீர்வு காண்கிறது.

**<u>50. எழுவினா எண்.4 க்கான தீர்வு :−</u>**

| | |
|---|---|
| **எழுவினா − 4** | வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன? |

51. எழுவினாக்கள் 1 முதல் 3 க்கு தீர்வு கண்டுள்ளதன் அடிப்படையில், வாதிகளுக்கு மேற்கொண்டு கிடைக்கக்கூடிய பரிகாரங்கள் வேறு எதுவுமில்லை என்றும், இவ்வழக்கின் சங்கதி மற்றும் சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு ஏற்பட்ட செலவு தொகைகளை அவரவர்களே பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்து இந்த எழுவினா 4 ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக,**

தாவா பகுதியாக அனுமதிக்கப்பட்டு, தாவா சொத்தான இ.ச.எண்.1204 ரீ.ச.எண்.476/26 பு.ஏ.0.18−1/2 சென்ட் பூமிகளில் வா.சா.ஆ.19 கிரைய

ஆவணத்தில் கண்டுள்ள விஸ்தீரணமான பு.ஏ.0.17 சென்ட் விஸ்தீரணத்தை விட கூடுதலாக உள்ள பு.ஏ.0.1–1/2 சென்ட் விஸ்தீரண பூமியைப் பொறுத்து 1 முதல் 4 பிரதிவாதிகளோ அல்லது அந்த சொத்தின் அசல் உரிமையாளரோ சட்டபடியான வழிவகைகள் (Due process of law) மூலம் நடவடிக்கைகள் எடுத்து சுவாதீனம் எடுக்கும் காலம் வரையில் தாவா சொத்துக்களை வாதிகள் அமைதியான சுவாதீனத்தில் வைத்து அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ அல்லது வேறு யாரும் எவ்விதத்திலும் எந்த வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 05 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.03.05 19:00:20 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u>:–

வா.சா.1 காசிநாதன் (1 ம் வாதி)

வா.சா.2 குமாரசாமி (மூன்றாம் தரப்பினர்)

வா.சா.3 நாச்சிமுத்து (மூன்றாம் தரப்பினர்)

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>:–

பி.வா.சா.1 தனலட்சுமி (1 ம் பிரதிவாதி)

<u>**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**</u>:–

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 04.06.2022 | தேதியிட்ட காங்கயம் காவல் நிலையத்தில் வாதிகளால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவிற்கு வழங்கப்பட்ட மனு ஏற்பு ரசீது (மனு எண்.175/2022) |
| வா.சா.ஆ.2 | 03.06.2022 | தேதியிட்ட காங்கயம் காவல் நிலையத்தில் வாதிகளால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவிற்கு வழங்கப்பட்ட மனு ஏற்பு ரசீது உண்மை நகல் (மனு எண்.174/2022) |
| வா.சா.ஆ.3 | 16.06.2014 | தேதியிட்ட காசிநாதன் மற்றும் செந்தில்குமார் இருவருக்கும் இடையே ஏற்பட்டுள்ள பாகப்பிரிவினை ஆவணம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 14.02.2020 | தேதியிட்ட ரீ.ச.எண்.476/26 க்கான சிட்டா சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.5 | 14.02.2020 | தேதியிட்ட ரீ.ச.எண்.476/26 க்கான அடங்கல் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.6 | 25.01.2020 | தேதியிட்ட 1ம் வாதி காசிநாதன் பெயரில் உள்ள வீட்டுவரி ரசீதுகள் (எண்ணிக்கை – 4) அசல் |
| வா.சா.ஆ.7 | 14.02.2020 | தேதியிட்ட 1ம் வாதி காசிநாதன் பெயரில் உள்ள மின் கட்டண ரசீது அசல் |
| வா.சா.ஆ.8 | 14.02.2020 | தேதியிட்ட 2ம் வாதி செந்தில்குமார் பெயரில் உள்ள வீட்டுவரி ரசீதுகள் (எண்ணிக்கை–4) அசல் |
| வா.சா.ஆ.9 | 14.02.2020 | தேதியிட்ட 2ம் வாதி செந்தில்குமார் பெயரில் உள்ள மின் இணைப்பு ரசீது அசல் |
| வா.சா.ஆ.10 | – | காங்கயம் காவல் நிலையத்தில் வாதிகளால் சமர்ப்பிக்கப்பட்ட புகார் மனு அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.11 | 24.08.1927 | தேதியிட்ட கணபதி பண்டாரம் பெயரில் ஏற்பட்டுள்ள பிரதிவாதிகள் உரிமை கோரும் சொத்துக்கான கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.12 | 05.08.2016 | தேதியிட்ட லட்சுமியம்மாள் (எ) லட்சுமி ஒரு தேவகி பெயரில் ஏற்படுத்தி வைக்கப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் கணினி சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.13 | 22.01.2021 | தேதியிட்ட 1, 2 வாதிகள் பெயரிலான வீட்டுவரி ரசீதுகள் (எண்ணிக்கை –8) |
| வா.சா.ஆ.14 | 22.01.2021 | தேதியிட்ட 1, 2 வாதிகள் பெயரிலான வீட்டுவரி ரசீதுகள் (எண்ணிக்கை –8) அசல் |
| வா.சா.ஆ.15 | – | 1, 2 வாதிகள் பெயரிலான மின் கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை – 4) அசல் |
| வா.சா.ஆ.16 | 07.06.2022 | தேதியிட்ட வில்லங்க சான்று கணினி நகல் |
| வா.சா.ஆ.17 | – | காங்கயம் காவல் துறையினரால் வழுங்கப்பட்டுள்ள மனு ரசீதுகள் அசல் |
| வா.சா.ஆ.18 | 06.06.2022 | தேதியிட்ட சென்னை உயர்நீதிமன்றம் சி.ஆர்.எல்.ஓ.பி.எண்.10260/2022 பிறப்பித்த உத்தரவு கணினி நகல் |
| வா.சா.ஆ.19 | 01.02.1934 | தேதியிட்ட அண்ணாமலை செட்டியார் பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.20 | 13.06.2025 | தேதியிட்ட ரீ.ச.எண்.476/26 க்கான பட்டா கணினி நகல் |
| வா.சா.ஆ.21 | – | வா.சா.3 தொழில் நடத்தி வரும் ஸ்ரீ வீரக்குமார் ஏஜென்சீஸ் பதிவு சான்றிதழ் சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.22 | – | வா.சா.3 ன் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) |

<u>**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**</u>:–

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 07.03.2005 | தேதியிட்ட சச்சிதானந்தம் என்பவரின் வாரிசு சான்றிதழ் உண்மை நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 11.10.2022 | தேதியிட்ட மின் கட்டண ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.3 | 07.09.2021 | தேதியிட்ட குடிநீர் கட்டண ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.4 | – | புகைப்படங்கள் (எண்ணிக்கை – 10) |
| பி.வா.சா.ஆ.5 | – | பி.வா.சா.1 ன் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) |
| பி.வா.சா.ஆ.6 | 27.12.2024 | தேதியிட்ட விஜயலட்சுமி என்பவரின் வாரிசு சான்றிதழ் கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.7 | 18.03.2015 | தேதியிட்ட குடிநீர் கட்டண ரசீது அசல் |

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.03.05 19:00:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.